பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

06 03 2026 FRIDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வேளாண் மற்றும் கிராமப்புற மேம்பாடு குறித்த பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக உரையாற்றுகிறார்.

2. கருப்பை வாய் புற்றுநோயை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

3. தமிழக ஆளுநராக கேரள மாநில ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் ஹர்லேக்கர் கூடுதல் பொறுப்பேற்கிறார்.

4. அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

5. உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் வேளாண் மற்றும் கிராமப்புற மேம்பாடு என்ற கருப்பொருளில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக உரையாற்றுகிறார்.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, பால்வளம், மீன்பிடி மற்றும் ஊரக வாழ்வாதாரம் ஆகிய நான்கு முக்கிய துறைகள் குறித்து இந்த இணையவழிக் கருத்தரங்கு நடைபெறுகிறது.

தென்னை, முந்திரி, பாதாம், சந்தனமரம் உள்ளிட்ட உயர்மதிப்பிலான பயிர் வகைகளின் விளைச்சலை ஊக்குவிக்கும் வகையில் இந்த கருத்தரங்கு நடைபெறுகிறது.

வேளாண் துறையில், செயற்கை நுண்ணறிவுடன் கூடிய டிஜிட்டல் பொது கட்டமைப்பு பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இந்த கருத்தரங்கில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

>>>>><<<<<

கருப்பை வாய் புற்றுநோயை முற்றிலும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

காணொலி மூலம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலக அளவில் சுகாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

நோய் தடுப்பு, பரிசோதனை, முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் குறித்த நேரத்தில் மருத்துவ சிகிச்சை அளிப்பது போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்துவதன் மூலம், இந்த நோய் பாதிப்பை தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

30 வயது முதல் 65 வயது வரையிலான பெண்களுக்கு ஆயுஷ்மான் சுகாதார மையம் மற்றும் இதர சுகாதார மையங்களில் கருப்பை வாய் புற்றுநோய் குறித்த பரிசோதனைக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நாடுமுழுவதும் இதுவரை 8 கோடியே 60 லட்சத்திற்கும் அதிகமான பெண்களுக்கு, தேசிய நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், கருப்பை வாய் புற்றுநோயை தடுக்கும் வகையில், நாடுதழுவிய தடுப்பூசி திட்டம், கடந்த மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

90 நாட்கள் வரை செயல்படுத்தப்படும் இந்த தடுப்பூசி இயக்கத்தின் கீழ், 14 வயதுக்குட்பட்ட ஒரு கோடியே 20 லட்சம் வளரிளம் பெண்களுக்கு தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

>>>>><<<<<

தெலங்கானா, மேற்குவங்கம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அறிவிக்கையை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ளார்.

கேரள மாநில ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் ஹர்லேக்கருக்கு, தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஆர்.என். ரவி, மேற்குவங்க மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளனர்

>>>>><<<<<

நாட்டில் தூய்மை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையில், பிரதமரின் இலவச சூரிய மின்சக்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் இத்திட்டத்தின் கீழ், பொதுத்துறை வங்கிகள் மூலம் பிணையில்லா கடனுதவி வழங்கப்படுவது, பெரிதும் பயனளிப்பதாக உள்ளது என்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கட்டிட பொறியாளர் திரு அசோக் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - பொறியாளர் 38 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது

தூத்துக்குடியில் நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசிய மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் என பல்வேறு தரப்பினரும் பயனடையும் வகையில், செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

தமிழ்மொழி மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்கும் வகையில், மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாக திருமதி. கீதா ஜீவன் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகம் உட்பட பத்து மாநிலங்களிலிருந்து 37 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

மனுக்களை திரும்பப் பெறுவதற்கு வரும் 9-ஆம் தேதி கடைசி நாளாகும்.

போட்டி இருக்கும் பட்சத்தில் இம்மாதம் 16-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

>>>>><<<<<

சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு சிறப்பு ரயில்களை இயக்க தெற்கு ரயில்வே ஏற்பாடு செய்துள்ளது.

இன்றும், நாளையும் விழுப்புரத்தில் காலை 9.10-க்கு புறப்படும் முன்பதிவில்லா பயணியர் சிறப்பு ரயில், பிற்பகல் ஒன்று ஐந்துக்கு நாகப்பட்டினம் சென்றடையும்.

மறுமார்கத்தில் பிற்பகல் மணி 1.20-க்கு நாகப்பட்டினத்தில் இருந்து புறப்படும் இந்த ரயில், மாலை ஐந்தரை மணிக்கு விழுப்புரம் சென்றடையும்.

இந்த பயணியர் சிறப்பு ரயில், நாகூர், காரைக்கால், திருநள்ளாறு, மயிலாடுதுறை, சீர்காழி, சிதம்பரம், கடலூர் துறைமுகம், பண்ருட்டி உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதனிடையே, திருநள்ளாறில் நடைபெறும் சனிப்பெயர்ச்சி விழா நேர்முக வர்ணனை ஆகாஷ்வாணி ரெயின்போ பண்பலையில் இன்று காலை 8 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

>>>>><<<<<

தமிழக அரசு, 16 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இந்த ஏல விற்பனை மும்பையில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கி அலுவலகத்தில் வரும் 10ஆம் தேதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாட்டின் பன்முக கலாச்சாரம் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், மத்திய கலாச்சார அமைச்சகத்தின் மேம்படுத்தப்பட்ட இணையதளம் நேற்று முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

புதுதில்லியில் உள்ள கடமை மாளிகையில் இந்த புதுப்பிக்கப்பட்ட இணையதள சேவை தொடங்கி வைக்கப்பட்டது.

இதன்மூலம், ஆராய்ச்சியாளர்கள், துறை சார்ந்த நிபுணர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும், டிஜிட்டல் துறையில் நாட்டின் தொன்மையாக கலாச்சாரம் குறித்த தரவுகளை அறிந்து கொள்ள முடியும்.

கையெழுத்துப் பிரதிகள், பழமையான ஆவணங்கள், அரியவகை புத்தகங்கள், ஓவியங்கள் உள்ளிட்டவை இந்த இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

## இருவரிச் செய்திகள்

ஈரானில் முக்கிய உள்கட்டமைப்பு வசதிகளை குறிவைத்து, இஸ்ரேல் விமானப்படை தாக்குதல் நடத்தி வருகிறது.

>>>>><<<<<

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலையை விரைந்து முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது.

>>>>><<<<<

காங்கோவில் நேரிட்ட நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 200-ஆக அதிகரித்துள்ளது.

>>>>><<<<<

இந்திய-மியான்மர் எல்லைப்பகுதியில் 31 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஜார்க்கண்ட் மாநிலம், மேற்கு Singbhum மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நக்ஸல் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளின் போது, கையெறி குண்டுகள் உட்பட பல்வேறு வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன.

>>>>><<<<<

*தூத்துக்குடியில் சட்டப்பேரவை தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கான ஆலோசனை கூட்டம் ஆட்சியர் திரு இளம்பகவத் தலைமையில் நேற்று நடைபெற்றது.*

*>>>>><<<<<*

*திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூரில், ஊராட்சி பொது நிதி மற்றும் பெரு நிறுவன சுற்றுச் சூழல் பொறுப்புணர்வு நிதி திட்டத்தின் கீழ், ஒரு கோடியே 23 லட்சம் ரூபாய் செலவில் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*>>>>><<<<<*

*வேலூர் மாவட்டம் காட்பாடியில், ரேணுகாம்பாள் கோயில் திருவிழாவை ஒட்டி எருதுவிடும் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.*

*>>>>><<<<<*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.*

*மும்பையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 7 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.*

*முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 253 ரன் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய சஞ்சு சாம்சன் 42 பந்துகளில் 89 ரன் எடுத்தார்.*

*இதனையடுத்து, 254 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இங்கிலாந்து, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 246 ரன் எடுத்தது. ஜேக்கப் பெத்தல் 48 பந்துகளில் 105 ரன் எடுத்தார்.*

*இப்போட்டியில் இந்தியாவின் சஞ்சு சாம்சன் ஆட்ட நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*அஹமதாபாத்தில் நாளை மறுநாள் நடைபெறவுள்ள இறுதி போட்டியில் இந்தியா - நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.*

*>>>>><<<<<*

*இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*பெர்மிங்ஹாமில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 21-23, 21-10 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் Ng Ka Long Angus-ஐ வென்றார்.*

*>>>>><<<<<*

*சிங்கப்பூர் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சோனாலி சிங் - Likhith Srivastava இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-13, 21-18 என்ற செட் கணக்கில் மலேசியாவின் Nichole Chau - Amanda Yap இணையை வென்றது.*

*மற்றொரு போட்டியில் இந்தியாவின் Nayana OASIS - Varshini VISWANATH SRI இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் கௌஷல் தர்மேந்தர், சமர்வீர், Hmar LALTHAZUALA, சித்தார்த் குப்தா ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>><<<<<*